S. T. Rathakrishnan

Regd. No. M. 4018

ஸ்ரீ:

ஸ்ரீ தந்வந்தரயே நம:

# ॥ वैद्यचन्द्रिका ॥

# வைத்ய சந்த்ரிகா

தமிழ் நாடு ஆயுர்வேத மஹா மண்டலத்தின்
ஆதரவில் நடந்துவரும் மாதப் பத்ரிகை.

Vol. 9 | January, 1947 | Nos. 1

ஆசிரியர் ;

V. B. நடராஜ சாஸ்த்ரி, ஆயுர்வேதாசார்ய.
வைத்ய விசாரத, வைத்யவாசஸ்பதி.

ப்ரகாசகர் : பண்டித ஸ்ரீ. மெ. ஸுந்தரராஜாசார்யர்.

விஷயங்கள்.

ஆரோக்கிய—சிகித்ஸா இலாகாக்களை
ஒன்று சேர்த்தலே யுக்தம் 1

ஸந்தோஷ விஷயம் 2

மௌனத்தின் மர்மமென்ன ? 3

ஓஷதிகளின் மஹத்வம் 4

வருஷச்சந்தா ரூ. 3—0—0

# குறிப்பு

வைத்ய சந்த்ரிகையில் பிரசுரம் செய்ய வேண்டிய விஷயங்கள், கட்டுரைகள் முதலிய அநுப்ப வேண்டிய விலாஸம்:—

ஆசிரியர், வைத்ய சந்த்ரிகா,

ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,

தென்னூர் ரோடு, திருச்சினுப்பள்ளி.

வைத்ய சந்த்ரிகையின் சந்தா, விளம்பர விகிதங்கள் மற்றும் தமிழ் நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் ஸகல விஷயங்களையும் குறித்து எழுத வேண்டிய விலாஸம் :—

வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S. ராமசர்மா,

பொதுக் கார்யதர்சி,

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலம்,

கரூர். (திருச்சி ஜில்லா)



ஸ்ரீ தந்வந்தரயே நம:


# வைத்ய சந்த்ரிகை.

| தொகுதி 9 | ஜனவரி, 1947 | பகுதி 1 |
|---|---|---|


## ஆரோக்ய—சிகித்ஸா இலாகாக்களை ஒன்று சேர்த்தலே யுக்தம்.

நமது பாரத பூமி இப்பொழுது ஸ்வாராஜ்ய ஸித்தியை சீக்கிரத்தில் அடைந்து கொண்டிருக்கும் தறுவாயிலிருக்கிறது. பூர்ண சுதந்த்ரம் பெற்றதும் நமது கலைகள் விஜ்ஞானங்கள் எல்லாம் மறுபடியும் முன் போல செழித்தோங்க ஸகல சாதனங்களும் ஸம்பூர்ணமாய் ஏற்படுமென்று யாவரும் ஆவலாயிருக்கின்றனர். ஆரோக்கியப் பகுதியில் யுத்தப் பிற்காலத்திய அபிவிருத்தித் துறைகளை அனுஷ்டானத்தில் கொண்டு வரும் ஏற்பாடுகளும் தொடங்குகின்றன. 1946 அக்டோபரில் டில்லி மாநகரில் ஆரோக்கிய மந்த்ரிகளுடைய ஆலோசனைக் கூட்டம் நடந்தது. போர் (BHORE) கமிட்டியின் யாதாஸ்துப் படியே ஆரோக்கியாபிவிருத்திகளைச் செய்வதாக முக்கியமாகத் தீர்மானித்துள்ளார்கள். இதுகாறும் பொதுஜன ஆரோக்கிய இலாகாவும் சிகித்ஸா இலாகாவும் தனித் தனியாக இருப்பதை ஒன்றாகவே இணைத்து விட வேண்டுமென்று சென்னை—பம்பாய் இரண்டு மந்திரிகளைத் தவிர மற்ற மந்திரிகள் யாவரும் கருதினார்கள். இது மிகவும் யுக்தமானது. நமது ஆயுர்வேதத்தின் கொள்கையுமிதுவே. “इह खलु आयुर्वेदस्य प्रयोजनं व्याध्युपसृष्टानां व्याधिपरिमोक्षः, स्वस्थस्य रक्षणं च” முதலிய வசனங்களினாலும், ஆயுர்வேத க்ரந்

தங்களில் எல்லாவற்றிலும் ஸ்வஸ்த வ்ருத்தத்தையும் சிகித்ஸையையும் சேர்த்துச் சேர்த்தே செய்துள்ள உபதேசங்களினாலும், தொன்று தொட்டு வந்த நமது தேச வைத்ய ஸம்ப்ரதாயங்களும் இதை த்ருடப் படுத்துகின்றன, வியாதிகளை வராமல் தடுக்கும் உபாயங்களையும் வந்த வியாதிகளைச் சிகித்ஸை செய்யும் வழிகளையும் ஒன்றுக் கொன்று சம்பந்தமின்றிப் பிரிப்பது மிகவும் அஸம்பாவிதம். ஒன்றையும் நேர்மையாக நடத்த முடியாது. பல ஆண்டுகளாக இவை பிரிந்து இருந்தனவே? என்ன நஷ்டமேற்பட்டது? தனித் தனியாக இருந்தால் நிர்வாஹ சௌகர்யம் அதிகமாயிற்றே! இப்போது எதற்காக ஒன்ருக்க ப்ரயத்தினம் செய்யவேண்டும் என்று கேட்கலாம்.

அநேக ஆண்டுகளாகத் தனியாக இருந்ததால் தான் இந்தியாவில் ஆரோக்கிய இலாகா சிகித்ஸை இலாகா இரண்டினுடையவும் லக்ஷயங்கள் ஓரளவிலும் பூர்த்தியாகாமல் அற்பாயுளினாலும் சூரையாடும் கொள்ளை நோய்களினாலும் இந்தியர்கள் மிகவும் துன்புறுகின்றனர். நிர்வாஹ சௌகர்யம் என்பது அர்த்தமற்றது. செய்ய வேண்டிய கார்யங்களின் லக்ஷ்ய ஸித்தியைப் பொறுத்து நிர்வாஹம் செய்கிறதா? அல்லது கணக்கு வழக்கு எழுதுவதின் ஸௌகர்யத்தைப் பொறுத்துச் செய்வதா? பிரித்தாளும் கொள்கையில் பெயர் பெற்ற மேல்நாட்டு வெள்ளையர்கள் நம் ராஜ்யத்தின் ஆளுகையில் நம் ஜனங்களுடைய மனதைப் பிரித்துப் பிரித்து ஆளுவதற்காக உபயோகிக்கும் ஓர் கருவியை ஸமூஹ வாழ்க்கையில் இன்றியமையாத எல்லாத் துறைகளிலுமே வேண்டுமென்றோ, வேண்டாமென்றோ, குண தோஷங்களைக் கருதியோ கருதாமலோ உபயோகப் படுத்தி வந்தனர், வருகிறார்கள். வியாதிக்கு சிகித்ஸை செய்பவனுக்கு மருந்துகளை நிர்மாணம் செய்யும் ஜ்ஞானம் கூடாது. மருந்துகள் நிர்மாணம் செய்பவனுக்கு அவைகளுடைய உபயோகம் தெரியக் கூடாது. இந்த இரண்டிலும் ஜ்ஞானம் வேண்டியதில்லை ஆரோக்கிய இலாகாக் காரனுக்கு, நோயாளிக்கு வைத்தியம் செய்பவனுக்கு வியாதி பரவாமல் தடுக்கும் கார்யத்தில் கவனம் செலுத்தும் சௌகர்யம் கூடாது. என்ன வேடிக்கை பாருங்கள்! இவ்விதம் ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாமல் கார்யம் நடத்தினால் மக்களுக்கு ஆரோக்கிய லாபம் எங்ஙனம் ஸித்திக்கும்?

ஸந்தோஷ விஷயம்.

அகில பாரத ஆயுர்வேத மஹா ஸம்மேளனத்தினுதரவில் நிறுவப் பட்டுள்ள டெல்லியிலிருக்கும் ஆயுர்வேதாபிவிருத்தி ஸமி

தியின் மந்த்ரீ ஸ்ரீ ஜி. டி. ஸாரஸ்வத B. A.. ஆயுர்வேதாசார்ய அவர்கள் ஆரோக்கிய மந்த்ரிகளுடைய ஆலோசனைக்கூட்ட சமயத்தில் ஆயுர்வேதாபிவிருத்தி வழிகளை விவரமாக எடுத்துரைத்துள்ளார். டாக்டர்கள் ஏ. லக்ஷ்மீபதி அவர்களும், என். எஸ். பரஞ்ஜபே அவர்களும் மந்த்ரிகளுடைய ஆலோசனை சமயத்தில் கலந்து கொண்டதாகத் தெரிகின்றது. இதன் பலனாக மத்ய சர்க்காரிலிருந்து ஆயுர்வேத யூனானி வைத்யர்களடங்கிய ஒரு தனிக் கமிட்டி தேசீய வைத்யாபிவிருத்தி வழிகளில் ஆலோசனை சொல்ல புதிதாக ஸ்தாபிக்கப் பட்டதானது ஒரு சந்தோஷ விஷயம்.

## மௌனத்தின் மர்மமென்ன?

சென்னையில் காங்கிரஸ் அரசாக்ஷி ஏற்பட்ட வுடனே பட்ஜெட் மீட்டிங் ஆரம்பமாவதற்கு முன்னமே அதாவது செலவு செய்ய வேண்டிய தொகை எவ்வளவென்று நிச்சயித்து ஒதுக்கப் படுமுன்பே இவ் வருஷத்தில் உடனடியாகச் செய்ய வேண்டிய ஆயுர்வேதாபிவிருத்திகளைத் தீர்மானிக்க ஆரோக்கிய மந்த்ரியம் மையால் ஆலோசனைக் கமிட்டி நிறுவப் பட்டது. ஒரு சட்ட நிபுணப் பெரியாரும் ஸ்பெஷல் ஆபீஸராக உடனே ஏற்படுத்தப் பட்டார். ஆலோசனைக் கமிட்டியின் மீட்டிங்குகள் அடுத்தடுத்து வேகமாய் நடந்தன. கால ஜீர்ணமான ஆயுர்வேதாபிவிருத்தி சர்க்காரினால் செய்யப்படக் கூடாது என்று கிளம்பிய துராக்ஷேப துர்வாதங்களை யெல்லாம் சரியான காரணங்களால் தவறு என்று தள்ளி கௌன்ஸிலில் 5 லக்ஷம் ரூபாய் தேசீயவைத்தியத்திற்காக ஒதுக்கப் பட்டது. இவைகள் நடந்த ஜரூரையும் ஆயுர்வேதக் கல்லூரிகள் எந்தெந்த நகரில் ஸ்தாபனம் செய்யலாம் என்று இடம் பார்க்கப் பட்டதையும், ஜூலை ஆகஸ்டு செப்டெம்பர் மாதங்களில் சென்னை அரசாங்கத்தாரின் ஆயுர்வேத விஷயமான முன்னேற்றங்களைப் புகழ்ந்த அழகையும் கவனித்து ஆயுர்வேதாபிமானிகள் இவ்வருடத்திற்குள்ளேயே சென்னை மாகாணம் முழுவதும் தேசீய வைத்ய மயமாய் நிரம்பி விடப் போகிறது என்று உள்ளம் பூரித்தனர்.

ஆனால் சென்ற மூன்று மாத காலமாக கவர்ன்மெண்டார் ஆயுர்வேத விஷயமான நடவடிக்கை பேச்சளவிலாவது ஏதாகிலும் நடத்துவதாகக் கூட பகிரங்கமாக ஒன்றும் தெரிய வில்லை. இதற்கு என்ன காரணமோ? சுதேச வைத்தியத்துக்காக ஒதுக்கி வைத்திருக்கும் 5 லக்ஷம் ரூபாய்களுக்கு உயிர் இன்னும் மூன்று மாதந்தான். இதற்குள் இத் தொகையை யுக்தமான வழியில் விநியோகம் செய்யாவிடில் வ்யர்த்தமாகிவிடும். இவ் வருஷம்

ஒதுக்கப் பட்ட தொகை வீணாவது மட்டுமல்ல; ஆயுர்வேதத்தி னபிவிருத்தி வகை தெரியாதவருக்குப் பணமினி கொடுக்கக் கூடா தென்று ஆயுர்வேத விரோதிகளுடைய ஏச்சுக்கும் பேச்சுக்கும் இடமாகும். கவர்ன்மெண்டாரால் இதற்காகவே நியமனம் செய் யப்பட்ட ஸ்பெஷல் ஆபீஸர் மௌனமாய்க் காலம் தள்ளும் மர் மம் விளங்கவில்லை.

ஆவடி ஆரோக்கியாசிரமத்திற்கு அளித்ததையும் ஸ்பெஷல் ஆபீஸர் விஷயமாக நடந்து கொண்டிருக்கும் செலவையும் நீக்கி மீதியிருக்கும் தொகையையாகிலும் சீக்கிரத்தில் எந்த விஷயமாய் இந்த 5 லக்ஷம் ரூபாய் உத்தேசிக்கப்பட்டதோ அந்த விஷயத்தில் யுக்தமான வழியில் உடனே விநியோகம் செய்யப் பட ஆரோக்ய மந்திரி அம்மையார் கவனம் செலுத்தவேண்டியது அத்யாவசியம்

ஆயுர்வேத விஷயமாய்க் கார்யஞ் செய்யக் குறைந்தது 50 லக்ஷம் ரூபாய் வேண்டும். அனுமதிக்கப் பட்டதோ 5 லக்ஷம் ரூபாய். இதையும் காலத்தில் சரியான வழியில் செலவழிக்காமல் வாளாவிருத்தலோ துர்விநியோகம் செய்வதோ பெரும் அநீதி யாகும்.

பழைய காங்க்ரஸின் அரசாக்ஷியில் ஆரோக்கிய மந்திரிக்கு ஆயுர்வேதத்தில் அபிமான மில்லாமையால் ஆயுர் வேதத்துக்கு இடையூறுகள் விளைந்தன. இப்போதைய காங்க்ரஸின் அரசா க்ஷியில் ஆரோக்கிய மந்த்ரிக்கு ஆயுர்வேதாபிமானம் ஹ்ருதயத் தில் பூர்ணமாயிருந்தாலும் செய்ய வேண்டிய கார்யங்களுடைய சரியான மார்க்கம் அறியாமையால் ஆயுர்வேதாபிவ்ருத்திக்கு பங் கம் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்று எமது அபிப்பிராயம். பகவத் ஸங்கல்பம் எப்படியோ தெரிய வில்லை.

## ஓஷதிகளின் மஹத்வம்.

உலகில் ஓஷதிகள் எண்ணிறந்தவை. ஓஷதிகளு டைய சக்தி விசேஷங்களையும் ஸாதாரண புத்தி சக்தியால் கண்டு பிடிக்க சாத்தியமில்லை. கடுக்காய், சிவதை வேர் முதலியவை என்ன காரணத்தால் கீழ் நோக்கி பேதியாகச் செய்கின்றன. வசம்பு, மலங்காரைக்காய் முதலியன சரீ

ரத்தில் மேல்நோக்கி ஏன் வாந்தியை உண்டு பண்ணுகின்றன என்று கேள்வி கேட்டால் பிரயோஜனமில்லை. இரண்டு ஓஷதிகளுடைய உள் அமைப்புக்கள் எல்லாம் ஒரே மாதிரியாக இருப்பினும் குணத்திலும் காரியத்திலும் வேருக இருக்கின்றன. அதிகமென்ன? இருவகை ஓஷதிகளை முற்றிலும் சுட்டு சாம்பலாக்கின பிறகும் கூட இந்த சாம்பல்களுடைய குணம் தனியே. ரஸாயன சாஸ்த்ர (chemistry) பரீக்ஷையின் பிரகாரம் எல்லா சாம்பல்களுடைய வஸ்து ஸ்வரூபம் ஒன்ருக விருப்பினும், அரசம்பட்டையைச் சுட்டு எடுத்த சாம்பலுக்கும் புளியம் பட்டையைச் சுட்டு எடுத்த சாம்பலுக்கும் கார்ய குணங்களில் மாறுதல் அனுபவத்தில் பிரத்யக்ஷமாயிருக்கிறது. இதற்கு என்ன காரணம் என்று கண்டு பிடிக்க முடிவதில்லை. இதை 'ஸ்வபாவம்' என்றும், ஸ்வபாவஸித்தமானதுக்கு காரணம் கேட்டுப் பிரயோஜனமில்லை யென்றும் பொதுவில் சொல்லி விடுவார்கள்.

ஆயுர்வேத சாஸ்த்ர காரர்கள் இது போன்ற அம்சங்களிலும் விசேஷ சூக்ஷ்ம விசாரம் செய்கின்றனர். ஓஷதி த்ரவ்யங்களில் ரஸங்கள், வீர்யங்கள், விபாகங்கள், பிரபாவங்கள் என்ற சூக்ஷ்மமான மூல தத்துவங்களைக் கண்டு பிடித்திருக்கின்றனர். ஓஷதியில் இந்த ரஸமிருப்பதால் இந்த வீர்யமிருப்பதால், இந்த விபாகத்தை அடைவதால் இந்த கார்யத்தைச் செய்கிறது என்று வெகுவாக பரீக்ஷைகள் செய்து காரண விவரணம் செய்துள்ளார்கள். இது மட்டுமல்ல; திரவியத்திலிருக்கும் ரஸத்துக்கும் எவ்விதம் இந்த குணம் வந்தது? என்ற பரம சூக்ஷ்மத்தையும் கண்டு பிடித்திருக்கின்றனர். த்ருஷ்டாந்தமாக— மதுர ரஸம் வாயுவையும் பித்தத்தையும் சமனம் செய்யும் ஸ்வபாவம் பெற்றவை என்று சொல்லுவதுடன் நில்லாமல் பஞ்ச பூத வர்க்கத்தில் பூமி—ஜல பூதங்களுடைய அதிகாம்சம் பெற்றுள்ள ஒரு கலவை விசேஷத்தினுல் மதுரரஸம் உண்டாகியிருப்பதால் வாயு பூதமும் தேஜோ பூதமும் மிகுதியாய் உள்ள வாத பித்த தோஷங்களை சமனம் செய்கின்றன.

சில ஸாமான்ய தர்மங்களைக் கொண்டு இது போல எல்லா வற்றுக்கும் ஊஹித்துக் கொள்ளும் உபாயங்களையும் காட்டிக் கொடுத்திருக்கின்றனர். எவ்வித காரண யுக்திகளைச் செலுத்த முடியாத படியும் சில ஓஷதிகளில் சில சக்தி விசேஷங்கள் பொதுக் காரணங்களுக்குக் கட்டுப் படாமலிருக்கின்றன. இதற்கு ஆயுர்வேத சாஸ்த்ரத்தில் த்ரவ்யங்களுடைய 'ப்ரபாவம்' என்று சொல்லப் படுகிறது. प्रभावो-चिन्त्य उच्यते என்றார் சரகர். விவரணம் செய்கிறார் வாக்படர்

रसादिसाम्ये यत्कर्म विशिष्टं तत् प्रभावजम् ।
दन्ती रसाद्यैस्तुल्याऽपि चित्रकस्य विरेचनी ।
मधुकस्य च मृद्वीका घृतं क्षीरस्य दीपनम् ॥ என்று.

சித்திர மூலம் என்ற மூலிகையிலும் தந்தி என்ற மூலிகையிலும் உறப்பு ரஸம், வீர்யம், விபாகம் எல்லாம் ஒரே மாதிரி. ஆயினும் தந்தி தீவ்ர விரேசனசக்தி * வாய்ந்தது. சித்திரமூலத்திற்கு விரேசன சக்தி சிறிதும் கிடையாது. அதிமதுரம் திராக்ஷை இரண்டிலும் மதுர ரஸம் ஒன்றாகிலும் அதிமதுரத்தில் விரேசன குணம் கிடையாது. திராக்ஷைக்கு உண்டு. இவ்விதமே நெய் பால் இரண்டிலும் மதுர ரஸம் சமமாயினும் நெய்க்கு அக்னி தீபன சக்தியுண்டு; பாலுக்கு இல்லை. ஆதலால் ரஸ வீர்ய விபாகங்கள் ஒரே மாதிரியாயிருந்தாலும் ஓஷதிகளில் எந்த ஒரு சக்திவிசேஷத்தால் தனிப்பட்ட கார்யம் உண்டாகிறதோ, அதத்கு பிரபாவம் என்று பெயர். இந்த ஓஷதியில் இந்த பிரபாவம் இருக்கிறது என்று சாஸ்த்ரங்களிலிருந்தும் குருபதேசங்களிலிருந்தும் நாம் தெரிந்து கொள்ள வேண்டியிருக்கிறது.

ஓஷதிகள் சரீர தாதுக்களில் சுபாசுபங்களைச் செய்யும் சக்தி பெற்றிருப்பது போலவே மனதிலும் செய்யும் சக்தி பெற்றவை. மனதின் ஸத்வம் ரஜஸ் தமஸ் ஆகிய முக்குணங்களை அதிகரிக்கவும் குறைக்கவும் சக்தி ஓஷதிகளுக்கு

* விரேசனம்—பேதியாகும் குணம்,

இருக்கிறது. ஆதலால் மனதின் சுத்திக்காகவும், வசத்திற்காகவும் பிரதானமாய் பிரவிருத்தித்துள்ள ஆத்யாத்மிக சாஸ்த்ரங்கள், கர்ம காண்டங்கள், ஞான காண்டங்கள், மந்த்ர சாஸ்த்ரங்கள், யோகசாஸ்த்ரங்கள், தர்ம சாஸ்த்ரங்கள் எல்லாம் மனதிலும் சரீரத்திலும் சுபாசுபங்களைச் செய்ய தன் தன் சாஸ்த்ரங்களின் பிரயோகங்களில் ஆயுர்வேதம் காட்டிய வழிப் படிக்கு ஓஷதிகளின் உபயோகங்களையும் யிரதானமாய் எடுத்துக் கொண்டிருக்கின்றன.

வேதத்தில் உபதேசிக்கப் பட்டுள்ள யாகாதி கர்மாக்களில், காம்ய கர்மங்களிலும் நிஷ்காம்ய கர்மங்களிலும் ஓஷதி விசேஷங்களுடைய விநியோகங்கள் பற்பல விதங்களில் ஹோமங்களிலும் ஹோமோபகரணங்களிலும் விதிக்கப் பட்டுள்ளன.

மந்த்ர ப்ரயோகங்களில் ஜபங்களுடைய ஆவ்ருத்திகளிலும், ஹோமங்களிலும் தூர்வை, (அறுகம்புல்) துளஸீ ருத்ராக்ஷம் முதலிய ஓஷ்திகளுடைய உபயோகம் அநுஷ்டிக்கப் படுகிறது; யோகஸாதனம் செய்வோர் கல்பவிதானத்துடன் மூலிகைகளையே பிரதானமாய் உபயோகிப்பது பிரஸித்தம். தர்ம சாஸ்த்ரங்களில் சரீர—மனச் சுத்தியைக் காப்பாற்ற வேண்டி ஆஹாராதி நியமங்களில் **न कलञ्जम् भक्षयेत्** என்று தள்ள வேண்டியவைகளையும், நெல்லிக்கனி முதலிய சேர்க்கவேண்டியவைகளையும் உபதேசிக்கின்றனர். இது மட்டுமல்ல. பிராயச்சித்தங்களில் கூட வேத மந்திரங்களைப் போல தர்ப்பம், தூர்வை, அர்க்கம் (எருக்கு) முதலிய ஓஷதிகளை ப்ரதானமாய்க் கருதுகின்றனர். பும்ஸவனாதி ஸம்ஸ்காரங்களில் வடசுங்கம் (ஆலம் மொக்கு) முதலிய ஓஷதிகளுக்கும் பிராதான்யம்.

ப்ரத்யக்ஷ தேவதாத்மகமான சூர்யன் முதலிய ஒன்பது கிரஹங்களுக்கும் ஓஷதிகளுக்கும் விசேஷ ஸம்பந்தமிருப்பதையும் மஹர்ஷிகள் கண்டுபிடித்திருக்கிறார்கள். நவக்கிரஹ ஜப ஹோமங்களில் அந்தந்த கிரஹ தேவதா மந்த்ரங்களை ஜபிப்பதுடன் பிரத்யேக கிரஹங்களுக்கும் ஆவா

ஹனத்திற்கு ப்ரத்யேக தான்யங்களையும் ஹோமத்திற்கு ஓஷதி ஸமித்துக்களையும் உபதேசம் செய்கின்றனர்.

| கிரஹங்கள். | | ஆவாஹன தான்யம். | ஹோம ஸமித். |
|---|---|---|---|
| 1 | சூர்யன் | கோதுமை गोधूम; | எருக்கு अर्कः |
| 2 | சந்திரன் | அரிசி तण्डुलम् | புரசு पलाशः |
| 3 | அங்காரகன் | துவரை आढकम् | கருங்காலி खदिरः |
| 4 | புதன் | பயறு मुद्गः | நாயுருவி अपामार्ग |
| 5 | பிருஹஸ்பதி | கடலை चणकम् | அரசு अश्वत्थः |
| 6 | சுக்ரன் | மொச்சை राजमाषः | அத்தி उदुम्बरः |
| 7 | சனி | எள்ளு तिलः | வன்னி शमिः |
| 8 | ராகு | உளுந்து माषः | அறுகு दूर्वा |
| 9 | கேது | கொள்ளு कुलुत्थः | தர்ப்பம் कुशः |

உபாஸனைக் கிரமத்திலும் இஷ்ட தேவதா ப்ரஸாதம் பெற தேவர்களுடைய பூஜைக்கு மந்த்ரங்களுக்குப் போல ஓஷதிகளுக்கும் பிராதான்யம் துளஸி, வில்வ பத்திரம், தூர்வை முதலியவைகளை எடுத்துக் கொள்வதனுல் பிரசித்தமே. சில தேவதைகளுக்கு சில பத்திரங்களைச் சேர்க்கக் கூடாது என்று விலக்குமிருக்கின்றன. விநாயகருக்கு துளசி கூடாது. விஷ்ணுவுக்கு அக்ஷதை கூடாது.

மூலிகைகளுக்கு மந்த்ரங்களுடையவும் ஹோமங்களுடையவும் சேர்க்கையினுல் மட்டுமே இம் மஹத்தான வீர்யங்கள் ஏற்படுகின்றன வென்ற ஸந்தேஹம் வேண்டாம். ஓஷதிகளினுல் மந்திரங்களுடைய சக்தி விருத்தியாகின்றது என்று நிச்சயித்தாலும் தவறில்லை. ஏனெனில், மந்திரங்களுடைய சம்பந்தமில்லாமலே மூலிகைகளுடைய தர்சனத்தாலும் தாரணத்தாலும் அரிய பெரிய லாபங்கள் கிடைக்கின்றன. गर्भसंगे तु बध्नीयात् हिरण्यपुष्पीमूलं हस्तपादयोः धारयेत् सुवर्चलां विशल्यां वा सु. शा. १० अ. பிரஸவம் காலத்தில் நேராக ஆகாமல் சிக்கல் ஏற்படின் ஸ்திரீயின் கை கால்களில் ஹிரண்யபுஷ்பீ, சவர்ச்சலா, விசல்யா என்ற மூலிகைகளைக் கட்டினுல் சீக்கிரத்தில் பிரஸவமாகும் என்று உபதேசிக்கி

ருர் சுச்ருதர். இன்னுமொரு அத்புதமான விஷயம்:— விவாஹ காலத்தில் மணமகளின் புஷ்பமாலையில் சில மூலிகைகளைச் சேர்த்துத் தொடுத்து அணிந்து கொள்வதனால் மணமகளுக்கு வைதவ்யம் ஏற்படாதென்றும், சில மூலிகைகளினால் சக்களத்தியே ஏற்பட மாட்டாள் என்றும் சொல்லப் படுகிறது. இந்த ஓஷதிகளுடைய ஞானமும் பிரயோகமும் நமது தேசத்தில் முன் காலத்தில் அனுஷ்டானத்தில் இருந்ததாக ஊஹிக்க பாஸகவி (भासकविः) அத்தாக்ஷியாகும்.*

மேற்கூறியவைகளையெல்லாம் விமர்சம் செய்து பார்த்தால் சராசர லோகத்தில் நிக்கிரஹா நுக்கிரஹங்களுக்கோ, சுபாசுபங்களுக்கோ திருஷ்டாதிருஷ்ட பலன்களான இரு வகை கர்மாக்களிலும் ஓஷதிகளுடைய உபயோகம் இன்றியமையாதது என்ற ஸித்தாந்தம் புலப்படுகிறது. மேலும் மூலிகைகளுடைய அநேக விதமான மகத்துவங்களை அறியவோ, நிர்ணயம் செய்யவோ சாதாரணமனிதனின் புத்தி

---

* भासकृते स्वप्नवासवदत्ते तृतीयांके—

வாஸவதத்தை பத்மாவதியின் விவாஹத்தில் மணமகன் உதயன ராஜாவின் மாலை கட்டும் பொழுது

आयुष्यं किमपि औषधं गुम्फनप्रसंगे हस्तप्राप्तं विलोक्य चेटीं पृच्छति—

इदं तावदौषधं किं नाम? चेटी— अविधवाकरणं नाम। वासवदत्ता— इदं बहुशो गुम्फितव्यं मम च पद्मावत्याश्च। पुनर्वासवदत्ता— इदं तावदौषधं किं नाम? चेटी— सपत्नीमर्दनं नाम। वासवदत्ता— इदं न गुम्फितव्यम्। चेटी— कस्मात्? वासवदत्ता— उपरता तस्य भार्या, तत् निष्प्रयोजनमिति। தொடுக்கும் வாஸவதத்தையே உதயனரின் முதல் பத்நீ. सपत्नीमर्दन மூலிகையைத் தொடுப்பதில் தனக்கே நாசகரமாகும் என்று இதை வாஸவதத்தை ஹாரத்தில் சேர்க்க வில்லை.

சக்தியால் சர்த்தியமில்லை. சாஸ்திரங்களும் குருபதேசங்களும் தான் சரணம் என்பதும் சொல்லத் தேவையில்லை.

भवन्ति चात्र श्लोका:—

अमीमांस्यान्यचिन्त्यानि प्रसिद्धानि स्वभावतः ।
आगमेनोपयोज्यानि भेषजानि विचक्षणैः ॥

प्रत्यक्षलक्षणफलाः प्रसिद्धाश्च स्वभावतः ।
नौषधीर्हेतुभिर्विद्वान् परीक्षेत कदाचन ॥

सहस्रेणापि हेतूनां नांवष्ठादिर्विरेचयेत् ।
तस्मात्तिष्ठेत् तु मतिमानागमे न तु हेतुषु ॥ सु. सू. अ. ४०

---

வாசகர்களுக்கு அறிவிப்பு.

இம் மாதம் பத்திரிகைக்கு மற்ற வியாஸங்கள் தயாராகியிருந்தும் காகிதம் காலத்தில் கிடைக்காமையால் குறைந்த பக்கங்களுடன் வெளியாகின்றது. அடுத்தமாதப் பத்திரிகையுடன் இம்மாதத்தில் சேர வேண்டியவைகளும் சேர்ந்து வெளியாகும்.

சென்ற வருடப் பத்திரிகைகள் தேவையுள்ளவர்கள் ரூபாய் மூன்று அனுப்பினல் அத்தொகுதி அனுப்பக்கூடும்

—பிரகாசகர்.

---

Printed and Published by Dr. S. M. Sundararajacharya
at the Sri Vilasam Press, Srirangam.